# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1867/5 - 2014 ජුනි මස 16 වැනි සඳුදා - 2014.06.16

*1867/5 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்**

*3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை*

*திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாபாஅபேவர்த்தன ஆகிய நான், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன், இக்கட்டளை மூலம் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன் :-*

*(1) மேற்கூறப்பட்ட சட்டத்தின் நோக்கத்துக்காகச் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக இனங்காணப்பட்ட கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தை மேல் மாகாணத்தில் கொழும்பு 03, ஆர். ஏ. டி. மெல் மாவத்தையிலுள்ள 418 ஆம், 420 ஆம், 422 ஆம் இலக்க இருப்பிடக்கூறுக் கட்டிடத்தொகுதியுடன் பொறுப்பேற்பதற்கான கருத்திட்டமொன்று பற்றிய (“கருத்திட்டம்”) இயைபான தகவலைக் கொண்டுள்ள அறிவிப்பு 2014, சனவரி 24 ஆந் திகதிய 1846/52 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.*

*(2) கருத்திட்டத்தைச் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக வெளிப்படுத்துவதற்கு (3) ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன், அத்தகைய கருத்திட்டம் செயல்நுணுக்க முக்கியவத்துவத்தையும் தேசிய நலனையும் ஈர்க்கின்றது, அத்துடன் அரசாங்கத்தின் அபிவிருத்திச் செயல்நுணுக்கத்தின்படி பொருளாதார அபிவிருத்தியில் அதியுச்ச முன்னுரிமையை ஈர்க்கின்றது.*

*(3) மேலேயுள்ள செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம், “கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தை மேல் மாகாணத்தில் கொழும்பு 03, ஆர். ஏ. டி. மெல் மாவத்தையிலுள்ள 418 ஆம், 420 ஆம், 422 ஆம் இலக்க இருப்பிடக்கூறுக் கட்டிடத்தொகுதியுடன் பொறுப்பேற்பதற்கானவொரு கருத்திட்டம்” எனவழைக்கப்படுதலும் அறியப்படுதலும் வேண்டுமென்பதுடன், கருத்திட்டக் கம்பெனி அவிக் இன்டர்நஷனல் ஹொடேல்ஸ் (லங்கா) லிமிட்டெட் என அறியவும்படும்.*

*(4) மேற்கூறப்பட்ட கருத்திட்டம், இலங்கை முதலீட்டுச் சபையுடனான கருத்திட்ட உடன்படிக்கையில் கூறப்பட்ட திகதியிலிருந்து அறுபது (60) மாதங்களினுள் அதன் வர்த்தகத் தொழிற்பாடுகளைத் தொடங்குதல் வேண்டும்.*

*(5) இக்கட்டளைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களிலிருந்தான விலக்களிப்பு, அதன்கண் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கமைய கருத்திட்டக் கம்பெனிக்கு ஏற்புடையதாதல் வேண்டுமென்பதுடன், இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்கு நடைமுறையிலிருத்தலும் வேண்டும்.*

***அட்டவணை***

*(1)* ***2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்***

(i) ***நிறுவக வருமான வரி***

*மாடி வீடுகளின் விற்பனை தவிர்ந்த கருத்திட்டக் கம்பனியின் அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைகள் மூலம் உற்பத்தியாகும் இலாபத்துக்கு பத்து (10) வருடக் காலப்பகுதியொன்றுக்கு ("வரி விலக்களிப்புக் காலம்") 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் வருமான வரி விதிப்பனவு தொடர்பான ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகாது.*

*கருத்திட்டக் கம்பனி வரி விதிப்பனவுக்கான இலாபத்தை ஈட்டும் முதல் ஆண்டு அல்லது கருத்திட்ட நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு ஆறு (06) வருடங்களின் பின்னர் அதில் எது முதலில் வருகிறதோ அத்திகதியில் இருந்து சொல்லப்பட்ட வரி விலக்களிப்புக் காலப்பகுதி ஆரம்பமாகும்.*

*வரி விலக்களிப்புக் காலப்பகுதி முடிவடைந்ததும், மாடி வீடுகளின் விற்பனை தவிர்ந்த நடவடிக்கைகள் மூலம் உற்பத்தியாகும் இலாபத்துக்கு ஐம்பது சதவீதத்திலான (50%) நிறுவக வரி விதிப்பனவு பதினைந்து (15) வருடங்களுக்கு ஏற்புடைத்தாகும் ("வரிச் சலுகைக் காலம்").*

*ஐயப்பாட்டைத் தவிர்ப்பதற்காக, மேற்சொல்லப்பட்ட வரி விலக்களிப்புக் காலம் மற்றும் வரிச் சலுகைக் காலம் முடிவடைந்ததும், கருத்திட்டத்தின் இலாபங்கள் மற்றும் வருமானம் தொடர்பில் அக்காலத்தில் அமுலில் இருக்கும் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கேற்ப வருமான வரி விதிப்பனவு ஏற்புடைத்தாகும்.*

(ii) ***பங்கு இலாபங்கள் மீதான வரி***

*விலக்களிக்கப்பட்ட இலாபங்களில் இருந்து பங்குதாரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் பங்கு இலாபங்கள் சொல்லப்பட்ட வரி விலக்களிப்புக் காலப்பகுதியான பத்து (10) வருடங்களுக்கு அல்லது விடயத்துக்கு ஏற்றவாறு ஆறு (06) வருடங்களுக்கு அதன் பின்னர் ஒரு (01) வருடத்துக்குமாக வருமான வரியிலிருந்து விலக்களிப்பு வழங்கப்படும்.*

(iii) ***தடுத்து வைக்கும் வரி***

*கருத்திட்டக் கம்பனிக்கு பின்வரும் விடயங்கள் தொடர்பில்* ***தடுத்து வைக்கும் வரி*** *அறவிடுதல் மற்றும் செலுத்துவதிலிருந்து விலக்களிப்பு வழங்கப்படும்.*

(a) *மூலதனச் செலவுக்காகப் பெறப்பட்ட வெளிநாட்டு கடன்கள் மீதான வட்டி மற்றும் உசாத்துணையாளர்களுக்கு செலுத்தப்பட்ட தொழில் நுட்பக் கட்டணங்கள் ;*

(b) *முகாமைத்துவக் கட்டணங்கள் மற்றும் பங்குவீத உரிமைக் கொடுப்பனவுகள் மீது, ஆயின் அத்தகைய கட்டணங்களின் மொத்தத் தொகை மொத்த செயற்பாட்டு வருமானத்தின் மூன்று சதவீதத்தை (3%) விஞ்சாமலிருத்தல் வேண்டும் ;*

(c) *சந்தைப்படுத்தும் கட்டணங்கள் மீது, ஆயின் மொத்த செயற்பாட்டு வருமானத்தின் ஒன்று தசம் ஐந்து சதவீதத்தை (1.5%) அத்தகைய மொத்த கட்டணங்கள் விஞ்சாமலிருத்தல் வேண்டும் ;*

(d) *ஊக்குவிப்பு முகாமைத்துவக் கட்டணங்கள் மீது, ஆயின் அத்தகைய கட்டணங்களின் மொத்தத் தொகை மொத்தச் செயற்பாட்டு வருமானத்தின் பத்து சதவீதத்தை (10%) விஞ்சாமலிருத்தல் வேண்டும்.*

(iv) ***நீங்கள் உழைக்கும் பொழுது செலுத்தும் வரி (நீ. உ. செ. வரி.)***

*கருத்திட்டக் கம்பனியின் வெளிநாட்டு ஊழியர்களுக்கு நீ. உ. செ. வரி செலுத்துவதில் இருந்து விலக்களிப்பு வழங்கப்படும் என்ற போதிலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இச்சலுகை ஆகக்கூடிய ஊழியர்கள் இருபது (20) பேர்களுக்கு மட்டுப்படுத்தப்படும். இந்த மட்டுப்பாட்டுக்கு அடிபணிவாக, கருத்திட்ட அமுலாக்கக் காலப்பகுதியான அறுபது (60) மாதங்கள் எனும் காலப்பகுதியில் கருத்திட்ட அமுலாக்கத்துக்கான வெளிநாட்டு ஊழியர்களுக்கும் கருத்திட்டத்தின் வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பித்த தினத்திலிருந்து ஐந்து (05) வருடங்கள் எனும் காலப்பகுதியில் கருத்திட்ட செயற்பாட்டுக்கான வெளிநாட்டு ஊழியர்களுக்கும் இவ்விலக்களிப்பு ஏற்புடைத்தாகும். ஆயின், எந்தவொரு ஊழியருக்கும் இவ்விலக்களிப்பு ஐந்து (05) வருடங்களுக்கு மேலாக வழங்கப்படலாகாது. மேலும் கருத்திட்டக் கம்பனி சிறந்ததொரு முயற்சியாக படிப்படியாக வெளிநாட்டு ஊழியர்களை உள்நாட்டு ஊழியர்களைக் கொண்டு மாற்றீடு செய்ய வேண்டும் எனத் தேவைப்படுத்தப்படுகிறது.*

*(2)* ***2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர்பெறுமதி வரிச் சட்டம்***

*அறுபது (60) மாத கருத்திட்ட அமுலாக்கக் காலகட்டத்தின் போது கருத்திட்ட அமுலாக்கத்துக்காக முதலீட்டுச் சபை அனுமதித்தவாறான பொருட்களின் இறக்குமதி மற்றும் கருத்திட்டம் சம்பந்தப்பட்ட பொருட்களின் அல்லது சேவைகளின் உள்நாட்டுக் கொள்வனவுகள் மீது* ***சேர்பெறுமதி வரி*** *செலுத்துதலில் இருந்து விலக்களிக்கப்படும். சேர்பெறுமதிச் சட்டத்தில் அனுமதிக்கப்பட்டவாறு கருத்திட்டக் கம்பனிக்கு வழங்கப்படும் பொருட்கள் மீது மாத்திரமல்லாது ஏதும் ஒப்பந்தக்காரருக்கு அல்லது ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு உப ஒப்பந்தக்காரர் ஒருவர் வழங்கும் பொருட்களுக்கும் சேர்பெறுமதி வரி தள்ளிவைப்பு ஏற்புடைத்தாகும்.*

*2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் ஏற்பாட்டுக்கேற்ப கம்பனி வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்ததிலிருந்து சேர்பெறுமதி வரி செலுத்துவதற்கு பொறுப்புடையதாகும்.*

*(3)* ***2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்***

*கருத்திட்ட அமுலாக்கக் காலப்பகுதியான அறுபது (60) மாதங்களின் போது கருத்திட்டம் தொடர்பான பொருட்களின் இறக்குமதி மீது துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு மற்றும் விதிப்பனவில் இருந்து கம்பனிக்கு விலக்களிப்பு வழங்கப்படும். கருத்திட்டத்துக்காக கருத்திட்டக் கம்பனி நேரடியாக மேற்கொள்ளும் இறக்குமதிகளுக்கு அல்லது கருத்திட்டத்துக்காக ஒப்பந்தக்காரர் ஒருவர் அல்லது உப ஒப்பந்தக்காரர் ஒருவர் மேற்கொள்ளும் இறக்குமதிகளுக்கும், அந்நியச் செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைய அத்தகைய பொருட்களைப் பெறுபவர் கருத்திட்டக் கம்பனியாக இருக்கும் வரை, இந்த விலக்களிப்பு ஏற்புடைத்தாகும்.*

*(4)* ***கட்டிடக் கைத்தொழில் உத்தரவாத நிதி விதிப்பனவு***

*கருத்திட்டம் தொடர்பாக 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் கட்டிடக் கைத்தொழில் உத்தரவாக நிதி விதிப்பனவில் இருந்து கருத்திட்டக் கம்பனிக்கு விலக்களிப்பு வழங்கப்படும்.*

*(5)* ***கருத்திட்டம் சம்பந்தப்பட்ட பொருட்களின் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை (235 ஆம் அத்தியாயமான சுங்கக் கட்டணச் சட்டம்)***

*கருத்திட்ட அமுலாக்கக் காலப்பகுதியான அறுபது (60) மாதங்களுக்குள் எதிர்மறை பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைத் தவிர சகல கருத்திட்டம் தொடர்பான மூலதனச் சுபாவத்தைக் கொண்ட பொருட்கள் மற்றும் சபையினால் அனுமதிக்கப்பட்டவாறு வேறு ஏதும் கருத்திட்டம் தொடர்பான பொருட்கள் கருத்திட்டத்தின் தேவைக்காகக் கம்பனியினால் அல்லது ஒப்பந்தக்காரர்கள் அல்லது உப ஒப்பந்தக்காரர்கள் மூலம் இக்கருத்திட்டத்தின் தேவைக்காகப் பிரத்தியேகமாக கருத்திட்டத்தைச் செயற்படுத்தும் கம்பனியின் பெயரில் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பிலும் சுங்கக் கட்டண விலக்களிப்பு ஏற்புடைத்தாகும். ஆயினும், அத்தகைய பொருட்கள் அளவிலும் தரத்திலும் கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்காக நேரகாலத்துக்கு ஏற்றவாறு இலங்கையில் முழுமையாக உற்பத்தி செய்யப்படாத மற்றும் உள்நாட்டுச் சந்தையில் கிடைக்காத பட்சம் எதிர்மறை பட்டியலில் உள்ள பொருட்களுக்கும் சுங்கக் கட்டணத்தில் இருந்து விலக்களிக்கப்படும்.*

*இவ்வாறாக, கருத்திட்ட அமுலாக்கக் காலப்பகுதியான அறுபது (60) மாதங்களுக்குள் மேற்குறிப்பிடப்பட்டவாறு பொதுவாக கருத்திட்டம் சம்பந்தப்பட்ட பொருட்களை ஒப்பந்தக்காரர் ஒருவர் அல்லது உப ஒப்பந்தக்காரர் ஒருவர் மூலமாக அத்தகைய பொருட்களைப் பெறுபவர் கருத்திட்டக் கம்பனி எனக் குறிப்பிடப்பட்டிருந்தால் மாத்திரம் இறக்குமதி செய்ய முடியும். எனவே, அத்தகைய ஏற்றுமதிகள் வேறு ஏதும் இறக்குமதிகளுடன் சேர்த்துச் செய்யப்பட்டிருப்பின், கருத்திட்டக் கம்பனியின் கருத்திட்டம் தொடர்பான பொருட்களுக்கு மாத்திரம் அத்தகைய சலுகைகள் கிடைக்கும் என்பதை உறுதிப்படுத்துவது கருத்திட்டக் கம்பனியின் முழுமையான பொறுப்பாகும். ஏதும் ஒரு காரணத்துக்காக இந்நிபந்தனை மீறப்பட்டிருந்தால், கருத்திட்டத்துக்கான கருத்திட்டம் தொடர்பான பொருட்களின் பகுதியாக அல்லாத சகல பொருட்களுக்கும் அச்சந்தர்ப்பத்தில் அமுலில் இருக்கும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் கீழ் வரிகள் மற்றும் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். ஏதும் ஒரு ஊழியர், உசாத்துணையாளர் அல்லது கருத்திட்டக் கம்பனியின் ஏதும் நபரின் சொந்த/பிரத்தியேகத் தேவைக்காக கருத்திட்டக் கம்பனியினால் இறக்குமதி செய்யப்படும் சொந்தப் பாவனைக்கான பொருட்கள் கருத்திட்டம் தொடர்பான பொருட்கள் எனக் கணிக்கப்படமாட்டாது என்பது கவனிக்கத் தக்கதாகும். கருத்திட்டக் கம்பனிக்கு 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள விலக்களிப்புக்கள்/ சலுகைகள் காரணமாக, கருத்திட்டக் கம்பனியுடன் சம்பந்தப்பட்டிருக்கும் ஏதும் வாடகையாளர் அல்லது வேறு தரப்பினருக்கு அத்தகைய சம்பந்தம் காரணமாக அல்லது அதன் விளைவாக ஏதும் விலக்களிப்புக்கள் அல்லது சலுகைகள் வழங்கப்பட மாட்டாது என்பது மேலும் கவனிக்கத்தக்கதாகும்.*

*லக்ஷ்மன் யாபா அபேவர்த்தன, பா. உ.,*
*முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்.*

கொழும்பு,
*2014, யூன் 16.*

*7 - 11*